
# கலைஞரும் நானும் 43

“முத்தமிழறிஞர் கலைஞர் சந்திப்பதற்கு அப்பாற்பட்டவர் என்கிற நிலையில் இருந்ததே இல்லை. மிக எளிதாக எந்தக் குறுக்கீடுகளும் இல்லாமல் சந்தித்துவிடலாம். இந்திய அளவில், வேறு எந்தத் தலைவரையும் அப்படி எளிதாகச் சந்தித்துவிட முடியாது” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் எழுத்தாளரும் பதிப்பாளருமான லேனா தமிழ்வாணன்.

■ **லேனா தமிழ்வாணன்,** எழுத்தாளர்-பதிப்பாளர்





## “நானும் பிரபலம்தான்யா!”

“கலைஞரின் ஒரு பார்வை, சிறு புன்னகை, எதிர்பாராத நேரத்தில் வாழ்த்து என எல்லாமும் அடர்த்திக் கொண்டவை. **‘கற்றோரைக் கற்றோரே காமுறுவர்’** என்பது போல, பத்திரிகைத் துறையில் உள்ளவர்கள் மீதும், எழுத்தாளர்கள், படைப்பாளிகள் மீதும் கலைஞர் அளவில்லாத அன்பு கொண்டிருந்தார். தனிமரியாதையுடன் நடத்தினார். அந்த அன்பைப் பல சந்தர்ப்பங்களில் நான் உணர்ந்திருக்கிறேன். அது என் தந்தையார் தமிழ்வாணன் காலத்தில் இருந்தே மாறாத வண்ணம் கொண்டது.

எனது தந்தையாருக்கும் அவருக்கும் நட்பும் உரசல்களும் இருந்தன. ஆளுங்கட்சியாக இருக்கிறபோது சில நேரங்களில் விமர்சனங்களைச் சந்திக்க வேண்டியிருக்கும். பத்திரிகையாளர்கள் அந்தப் பொறுப்பினை எடுத்துக் கொள்வர். அந்த வகையில், எனது தந்தையார் தமிழ்வாணன் துணிந்து செயல்படுவார். கலைஞரின் நிலைப்பாடுகள் மீது விமர்சனம் வைத்துள்ளார். ஆனால், அந்த விமர்சனங்களை எதிர்கொள்ள கலைஞர் தயங்கியதே இல்லை. சரிசெய்ய வேண்டியது எனில் திட்டமிடுவார்.

தவறான விமர்சனம் எனில், உடனே பதில் அளித்துவிடுவார். நட்பு வேறு, பத்திரிகை வேறு என்பதில் கலைஞரும் கறாராக இருந்தவர். நியாயத்தின் பக்கம் நிற்பவராக கலைஞர் இருந்தார் என்பதில் யாருக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

### நெகிழச் செய்த வரவேற்பு

கலைஞரிடத்தில் நான் கொண்டிருந்த ஈடுபாடு என்பது வெளிப்படையானது அல்ல. அவரது எழுத்து, பேச்சு, சினிமா, ஆளுமை இவற்றை வியந்து நின்ற காலங்கள்தான் அதிகம். எந்தத் தேவையோடும் அவரை நான் சந்தித்ததில்லை. 2002-ஆம் ஆண்டில்தான் முதன்முதலில் கலைஞரைச் சந்தித்தேன்.

என் மகன் திருமணத்துக்கு அழைக்க விருப்பப்பட்டு, இலக்கிய அணி கயல் தினகரன் வழியாக சண்முகநாதன் ஐயாவிடம் பேசினேன். அவர் கலைஞரிடம் பேசிவிட்டு, அடுத்த நாளே, இரவு 8 மணிக்கு வரச்சொன்னார் எனக் கூறினார். அடுத்த நாள் சென்று, கோபாலபுரம் வீட்டு மாடியில் சந்தித்தேன். என்னை எழுந்து நின்று வரவேற்றது, என் உள்ளத்தை நெகிழச் செய்துவிட்டது. அவரது வயது, அனுபவம், ஆளுமை எல்லாவற்றுக்கும் முன் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம். ஆனால், அந்த மரியாதையும் இனிமையும் வேறு எந்தத் தலைவரிடமும் காணமுடியாதது.

“தமிழ்ப் பாரம்பரியம் மிக்கக் குடும்பம். அவர்கள் நிகழ்ச்சிக்குப் போகணும். குறித்துக் கொள்ளவும்” என அப்போதே சண்முகநாதன் ஐயாவிடம் கூறி, என்னை மகிழ்வித்தார். ‘பார்க்கலாம்’ என்கிற பதில் இல்லை, உறுதியான பதில். இந்த உறுதிதான் கலைஞரிடம் கடைசிவரை இருந்த சிந்தனைத் தெளிவு.

### வரவேற்புரைக்குப் புன்னகைப் பரிசு

சொன்னதுபோலவே, எனது மகன் திருமண நிகழ்வுக்கு கலைஞர் வருகை தந்து வாழ்த்தினார். அந்த நிகழ்வுக்கு வந்த சரத்குமார்-ராதிகா ஆகியோர் கலைஞரைச் சந்திக்க நேர்ந்ததும், அரசியல் உறவு புதுப்பிக்கும் நிகழ்வாக அமைந்துவிட்டது. நாட்பட்ட ஒரு கருத்து வேறுபாட்டுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் நிகழ்வாக அது இருந்தது. அது எங்கள் வீட்டு நிகழ்ச்சியில் நடந்தது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

அதன்பின்னர் சில ஆண்டுகள் கழித்து, எனது தம்பி மகன் திருமண நிகழ்வுக்கும் அழைத்திருந்தேன். அதே அன்பும் மரியாதையும் தந்து நடத்தினார். அவர் வர இயலாது என்றும், தளபதி அவர்களை அனுப்பி வைப்பதாகவும் வாழ்த்தி அனுப்பினார்.

**‘குமுதம் ஆண்டுவிழா’** நிகழ்ச்சியின்போது, ராஜா அண்ணாமலை மன்றத்தில் அந்த நிகழ்வை நான் தொகுத்து வழங்கினேன். அந்த நிகழ்ச்சிக்கு வந்த கலைஞர், என் வரவேற்புரையைக் கேட்டுவிட்டு, அவர் அருகில் அமர்ந்திருந்த கவிஞர் வைரமுத்து அவர்களிடம் ‘தமிழ்வாணன் பையன், நன்றாகப் பேசுகிறார்’ என்று கூறியுள்ளார்.

நிகழ்ச்சிக்குப் பின்னர் வைரமுத்து அவர்கள் என்னிடம் கூறுகையில், ‘உங்கள் உரையை கலைஞர் உன்னிப்பாக கவனித்தார், உங்க பேச்சு அவரை இம்ப்ரஸ் செய்தது’ எனக் குறிப்பிட்டார். எனக்கு அவ்வளவு மகிழ்ச்சியாக இருந்தது. கலைஞர் புறப்படுகையில், என்னைப் பார்த்து ஒரு புன்னகை செய்துவிட்டுச் சென்றதும் அந்த மகிழ்ச்சியைப் பன்மடங்காக்கியது.

அந்தப் புன்னகைக்கு அர்த்தம் ஓர் அன்பு, அரவணைப்பு, ஆசீர்வாதம் என்பதாக இருந்தது. அவ்வளவு கூட்டத்துக்கு மத்தியில், நாம் யாரால் கவனிக்கப்படுகிறோம், கௌரவிக்கப்படுகிறோம் என்பதே புளகாங்கிதம் தரக்கூடியதுதானே. அதை கலைஞரிடமிருந்து பெற்றேன்.

### நகைச்சுவையில் கடந்து செல்வது

எனது தந்தையார் நினைவு தினம் நவம்பர் 10-ஆம் தேதி. அதையொட்டி ‘கல்கண்டு’ இதழில் ஒவ்வோர் ஆண்டும் நினைவுக் குறிப்புகளைக் கொண்டு வருவோம். அதற்காக ஒருமுறை கலைஞரிடம் எனது தந்தையார் குறித்த கட்டுரை கேட்டிருந்தேன். அதில், எனது தந்தையாருக்கும் அவருக்கும் நிகழ்ந்த ஓர் உரையாடலைக் குறிப்பிட்டிருந்தார். அதிலும் அவர் நகைச்சுவைத் திறன் வெளிப்பட்டது.

அதில் எழுதி இருந்தார், ‘‘தமிழ்வாணன் ஒருமுறை என்னிடம், எனது வழுக்கைத் தலை குறித்துக் கேட்டார். ‘‘அடடே... வழுக்கை விழ ஆரம்பித்துவிட்டதே’ என்றார். அதற்கு நான், ‘இள(ம்)நீரில் கூட வழுக்கை இருக்கும்’ எனப் பதிலளித்தேன்”. முதுமைக்கு மட்டுமே வழுக்கை அல்ல, இளமைக்கும் வழுக்கை இருக்கே என்கிற அந்த நகைச்சுவை ததும்பும் உரையாடலை நினைவில் வைத்து எழுதிக் கொடுத்தார். அந்தக் கடிதத்தின் இறுதியில் “அன்புத் தம்பி லேனா தமிழ்வாணனுக்கு வாழ்த்துகள்” என ஒரு வரி எழுதி இருந்தார். நான் கேட்டதையும் கொடுத்து, வாழ்த்திய பண்பும் கலைஞரின் பன்முக ஆளுமைக்குச் சான்று.

> **“அடடே... வழுக்கை விழ ஆரம்பித்துவிட்டதே’ என்றார். அதற்கு நான், ‘இள(ம்)நீரில் கூட வழுக்கை இருக்கும்’ எனப் பதிலளித்தேன்”.**

எங்களின் மணிமேகலை பிரசுரத்தில் இருந்து **‘பிரபலமானவர்களின் விலாசங்கள்’** என்கிற தொகுப்பினை வெளியிட்டு வருகிறோம். எம்.ஜி.ஆர் முதலமைச்சராக இருந்தபோது கொண்டுவந்த பதிப்பில், அட்டைப்படத்தில் அவரது படத்தை வைத்திருந்தோம். அந்த நூலை கவிஞர் வாலி அவர்கள் கலைஞரிடத்தில் காண்பித்து இருக்கிறார். அதற்கு முன் வந்த பதிப்பில், கலைஞரை அட்டைப்படமாக வைத்திருந்தோம். அது அவரது கவனத்துக்குச் செல்லவில்லை. எனவே புதிய பதிப்பினைப் பார்த்ததும், “யோவ், நானும் பிரபலம்தான்யா” என்று கூறி இருக்கிறார். அதை கவிஞர் வாலி அவர்கள் என்னிடம் குறிப்பிட்டார். சட்டென ஒரு நகைச்சுவையில் அதைக் கடந்து செல்வது அவரது ஆளுமையாக இருந்தது.

சில சந்தர்ப்பங்களில் கலைஞரைச் சந்திக்கும்போது, “நல்லா பண்றீங்க” என்பார். அது ஆயிரம் அர்த்தங்களைச் சொல்லும் வார்த்தைகள். அவரது குடும்ப நிகழ்ச்சிகளின் அழைப்புப் பட்டியலில் எங்களது பெயர் தவறாமல் இடம்பெறும். அமைச்சர் உதயநிதி அவர்களின் திருமணத்தின்போது, எனக்கு அவரது மனைவி வீட்டினரிடமிருந்தும் அழைப்பு. நிகழ்ச்சியில் அதை கலைஞரிடம் குறிப்பிடுகிறேன். “அய்யா எனக்கு இருவீட்டார் அழைப்பு” என்றேன். “ஓகோ.. புரிகிறது... புரிகிறது” எனப் புன்னகைத்தார். அப்படியான நேரங்கள், குறிப்புகள், அடர்த்தியான ஆழ்ந்த பொருள் கொண்டவை என்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமே அறிவதாக இருக்கும்.

எழுத்து வன்மையும், பேச்சு வன்மையும் ஒருங்கே பெற்ற தலைவராக இருந்ததால்தான் எழுத்தாளர்களை மதித்து, உள்வாங்கி அவர்களுக்குத் துணை நின்றவராக இருந்தார். அந்தப் பேனா தற்போது மூடிவைக்கப்பட்டுள்ளது..!”

...பகிர்வார்கள்

## பள்ளிப் படைப்பாளிகளுக்கு வாழ்த்துகள்!



தமிழ்நாடு அரசுப் பள்ளி மாணவர்களின் கற்றலையும் ஆற்றலையும் மேம்படுத்தும் வகையில் ‘தேன்சிட்டு’ என்கிற சிறார் இதழை பள்ளிக்கல்வித் துறை நடத்தி வருகிறது. ஆறாம் வகுப்பு முதல் ஒன்பதாம் வகுப்பு வரையிலான மாணவப் பருவத்தினரை அறிவியல், சமூக நோக்கிலான பார்வையுடன், உலக அறிவுக்குத் தயார்ப்படுத்தும் வகையில் இந்த இதழ் உள்ளது.

மாணவர்கள் மத்தியில் இந்த இதழுக்குக் கிடைத்துள்ள வரவேற்பு, வாசிப்பு மற்றும் படைப்பாளுமையை வளர்க்கும் வகையில் அமைந்துள்ளதை நவம்பர் மாத இதழில் பார்க்க முடிகிறது. இதழ் எண்-23 இல், முழுவதும் மாணவப் படைப்பாளிகள் நிரம்பியுள்ளனர். 62 மாணவக் கண்மணிகள் பங்களித்துள்ளனர்.

கடந்த ஆண்டு, அரசுப் பள்ளி இலக்கியப் போட்டிகளில் வெற்றிபெற்று, சிங்கப்பூருக்கு கல்விச் சுற்றுலா சென்ற மாணவர்கள் தங்களின் அனுபவங்களைப் பகிர்ந்துள்ளனர். அந்த மகிழ்ச்சியும் அனுபவமும் பிற மாணவர்களுக்கும் ஊக்கம் அளிப்பவையாக அமைந்துள்ளன. இதழை அலங்கரித்த மாணவப் படைப்பாளிகளின் புகைப்படத் தொகுப்பும் மலர்க்கொத்தாக வண்ணம் சேர்க்கிறது. வாய்ப்புள்ளோர் வாசிப்போம். வளரும் தலைமுறையின் ஆற்றலைப் போற்றுவோம்.

## :ப்ளாஷ்பேக்





### நெப்போலியனுக்குப் பரிசு!



துரைவேலு

இளைஞர் அணியின் முதல் மாநில மாநாடு 2007-ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 தேதிகளில் திருநெல்வேலியில் நடைபெற்றது. அப்போது காஞ்சிபுரம் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளராக இருந்த நான், இளைஞர் அணி அணிவகுப்பைத் தலைமையேற்று நடத்தினேன். காஞ்சிபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த நாங்கள் ‘மாவீரன் நெப்போலியன்’ போன்று போர் உடை அணிந்து நடைபோட்டது காண்போரையும் தேர்வுக் குழுவையும் வியப்பில் ஆழ்த்தியது. அந்த மாநாட்டில் எங்கள் மாவட்டத்துக்கு முதல் பரிசு வழங்கப்பட்டது. தலைவர் கலைஞர் அவர்களின் பொற்கரங்களால் முதல் பரிசைப் பெற்றது என் வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்வு என்றே சொல்வேன்.

**-ஆலந்தூர் ஆ.துரைவேலு, நகர மன்ற முன்னாள் தலைவர், ஆலந்தூர்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### கழகம் உடன்படாது!

**1955-ஆம் ஆண்டு, இந்தி மொழியை எப்படிச் செயல்படுத்தலாம் என்பதற்காக அமைக்கப்பட்ட ‘இந்தி கமிஷன்’ அழைப்பை ஏற்று, பேரறிஞர் அண்ணா ஆலோசனை அளிக்க உள்ளார் என்கிற ஒரு தவறான செய்தியினை ‘சுதேசமித்திரன்’ பத்திரிகை வெளியிட்டது. இந்தச் செய்தியில் உண்மையில்லை என்றும், அந்தக் குழுவின் அழைப்பை ஏற்றுக்கொள்ளவோ, அங்கு ஆலோசனை கூறவோ கழகம் உடன்படாது என அப்போது பொதுச் செயலாளராக இருந்த நாவலர் அறிக்கை விடுத்தார்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 291




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131